**<u>1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>அ.வ.எண்.257 /2021</u>**

2023 வது ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ம் நாள் P.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.இளங்கோவன் | வட்டம் : | சென்னை |
| த/பெ : | திரு.வேல்சாமி | கிராமம் : | |
| வயது : | 52 | மதம் : | |

**<u>12.04.2023 முதல் விசாரணை:</u>** நான் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 26.04.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும். வாதி மின் இணைப்பில் கட்டிய பில்கள் வா.சா.ஆ.2 ஆகும். தீர்வை ரசீதுகள் வா.சா.ஆ.3 ஆகும். 20.3.2021 தேதியிட்ட புகார் மனு நகல் வா.சா.ஆ.4 ஆகும். 21.03.2021 தேதியிட்ட CSR ரசீது வா.சா.ஆ.5 ஆகும். 31.03.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகும். 16.04.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகும். புகைப்படங்கள் வா.சா.ஆ.8 ஆகும்.ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 ஆகும். ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.2 ஆகும்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.257/2021

11.07.2023. வா.சா. 1 திரு. இளங்கோவன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. என் தகப்பனர் பெயர் வேலுசாமி என்றால் சரிதான். அவரது தகப்பனர் பெயர் சப்பானி என்ற சுப்பையா. சுப்பையாவின் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் ஆறுமுகம். ஆறுமுகம் என் தந்தைக்கு சித்தப்பா முறை என்றால் சரிதான். ஆறுமுகத்தின் மனைவி பெயர் இசக்கியம்மாள். தாவா சொத்து குறித்து இசக்கியம்மாள் பெயரில் நாளது தேதியில் பட்டா உள்ளது என்றால் சரிதான். இசக்கியம்மாள் காலம் சென்று 20 வருடங்கள் இருக்கும். இசக்கியம்மாளுக்கு வாரிசுகள் இல்லை. இசக்கியம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
2. வா.சா.ஆ.1ல் இசக்கியம்மாளின் வாரிசு சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆறுமுகம் எனது தந்தையின் தம்பி என பிராதில் 3ம் பத்தியில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விவரம் முன்பே தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதியின் தாயாருக்கு தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் இடம் உள்ளது என்றால் சரிதான். இசக்கியம்மாள் என் தந்தைக்கோ, தாய்கோ தனிப்பட்ட முறையில் எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவிலைல்ல என்றால் சரிதான்.
3. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கும் தனலெட்சுமி என்பவருக்கும் 2011ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் முன்பு தாவா சொத்து காலிமனை என்றால் சரிதான். வீடு எப்போது விழுந்தது என்றால் 20 வருடங்கள் இருக்கும். வா.சா.ஆ.3 தீர்வை ரசீது தாவா வீட்டிற்குரியது அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.2 தாவா வீட்டிற்குரியது அல்ல என்றால் சரிதான். என் தந்தையுடன் பிறந்தவர் தான் மந்திரம் என்றால் சரியல்ல. மந்திரத்தின் மகன் செந்தில்வேல் என்றும் செந்தில்வேலின்

மகன் தான் பிரதிவாதி  என்றால் சரிதான்.

4. இசக்கியம்மாள் வாரிசுகள் இல்லாமல் இறந்து விட்டதால் எனது தாத்தா தாவா சொத்து மந்திரம் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என கூறியுள்ளார் என்றால் சரியல்ல.2011ம் ஆண்டே தாவா சொத்தில் பிரச்சினை ஏற்பட்ட நிலையில் காலதாமதமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி எப்போது வீடு கட்டினார் என்றால் வழக்கு தொடர்ந்த சமயத்தில் தான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் அவர் வீடு கட்டி வருகிறார் என்றும் தாவா சொத்தில் கட்டவில்லை என்றால் சரியல்ல.

5. இசக்கியம்மாள் வாரிசாக எனது தாயார் வரமாட்டார் என்றால் சரியல்ல. வழக்கானது கால தோஸ்ச சட்டத்தால பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல. என் தரப்பு ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No. 257/2021

2023 வது ஆண்டு செப்டம்பர் மாதம் 08-ம் நாள் பி.வா.சா.1ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.இளவரசன் | வட்டம் | |
| த.பெ | திரு.செந்தில்வேல் | கிராமம் | |
| வயது | 53 | மதம் | |

08.09.2023 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

( பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)